1979 ஏப்ரல் 25]

Labour Advisory Board Meeting

*Q. No. 815—Thiru SALEM M. ARUMUGAM: Will the Hon. the Minister for Labour be pleased to state:

(a) whether the Tamil Nadu Labour Advisory Board met at Tiruchirappalli about the 25th April, 1978 and

(b) if so, the details of the ecommendations made at the meeting?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) ஆம்.

(ஆ) திருச்சியில் நடந்த கூட்டத்தின் நிகழ்ச்சி குறிப்பு * சபைமுன் வைக்கப்படுகிறது.

திரு. சேலம் மு. ஆறுமுகம்: பேரவைத் தலைவரவர்களே, திருச்சியில் நடைபெற்ற தொழிலாளர் நல ஆலோசனைக் குழு வானது கூடி ஓராண்டுக்கு மேலாகிறது. அந்தக் குழுவினால் பரிந்துரைக்கப்பட்ட ஆலோசனைகளில் எத்தனையை அரசு நிறை வேற்றியுள்ளது? மேலும், அக்குழுவினை விரிவுபடுத்தி, அடிக்கடி தொழிலாளர் நலம் பற்றி விவாதிக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலை வரவர்களே, தொழிலாளர்கள் நலம் குறித்து பல்வேறு குழுக்கள் இருக்கின்றன. லேபர் அட்வைசரி போர்ட் என்பது நான்ஸ்டேச் சுட்டரி பாடி, இந்தக் குழு கூடி 8 மாதங்கள் ஆகின்றன. அடுத்த கூட்டம், 1979ஆம் ஆண்டு மே திங்கள் 14-ம் நாளன்று கோவையிலே நடக்க இருக்கிறது என்பதையும், அப்படி நடத்த உத்தரவிட்டிருக்கிறேன் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் ஆறுமுகம் அவர்களுக்கும், மாண்புமிகு உறுப்பினர் ரமணி போன்றவர்களுக்கும் சொல்லிக் கொள்கிறேன்.

திரு. கு. ரமணி: தலைவரவர்களே, அவர் கோவையிலே குழுக் கூட்டத்தை வைத்திருப்பதற்கு நன்றி. ஆனால், 8 மாதங் களாக இந்தக் குழு கூடாமல் இருப்பதற்கு என்ன காரணம்? ஏராளமான தொழிலாளர் பிரச்சினைகள், தகராறுகள் நடந்து கொண்டிருக்கும்போதே, இந்தத் தொழில் சங்கங்களுடைய முக்கியமான மையத்தினுடைய பிரதிநிதிகளைக் கொண்ட அந்தக் குழு அடிக்கடி, கூடி தொழிலாளர் நல அமைச்சரவர்கள் சேர்ந்து முடிவெடுத்தால், அநேகத் தவறுகளைத் தவிர்த்திருக்க முடியுமா இல்லையா? அது ஏன் கூட்டப்படவில்லை? என்ன காரணம் என் பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலை வர் அவர்களே, லேபர் அட்வைசரி போர்ட் அவ்வப்போது, எழக் கூடிய தொழிலாளர் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக ஏற்பட்ட

* 467-ஆம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

[1979 ஏப்ரல் 25

குழு அல்ல, எதிர்காலத்தில் தொழிலாளர்களுக்கு என்ன செய்ய வேண்டுமென்று திட்டம் தீட்டக்கூடிய குழு, அவ்வப்போது ஏற்படக்கூடிய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு 'நெகோஷியேஷன் கன்சிலியேஷன்' இருக்கிறது. காலதாமதம் ஆவதற்கு உண்மையாகவே நான் வருந்துகிறேன். இனிமேல் தொடர்ச்சியாக அடிக்கடி எவ்வளவு கூட்டம் ஏற்பாடு செய்யப்படுமோ, அவ்வளவு கூட்டம் ஏற்பாடு செய்யப்படும். போதும் என்று சொல்லுகிற வரையில் கூட்டங்கள் நடத்தப்படும் என்று இங்கே உறுதி கூறுகிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : பேரவைத் தலைவரவர்களே, இந்தக் குழுக் கூட்டத்தில், மக்கள் தொகைக் கல்வி, குடும்ப நலத் திட்டம் ஆகியவற்றில் தொழிலாளர் நிர்வாகத்தின் பங்கு என்ற தலைப்பில் இந்த இனம் குறித்து விவாதிக்க வேண்டியது அவசியமில்லை என்று கருதப்பட்டு கைவிடப்பட்டது என்று போடப்பட்டிருக்கிறது. அதற்கு என்ன காரணம்? தொழிலாளர்களுக்கு குடும்ப நலத்தில் அக்கறை இல்லை என்பது அர்த்தமா? அல்லது வேறு ஏதேனும் காரணமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவரவர்களே, குடும்ப நலத் திட்டம் என்பது 'பாமிலி பிளானிங்', அதற்காக, தனி இலாகா இருக்கிறது. அமைச்சர் இருக்கிறார். ஆகையால், அது விடப்பட்டிருக்க வேண்டுமென்று கருதுகிறேன்.

[முற்பகல் 9-40]

திரு. வி. கே. கோதண்டராமன் : தலைவர் அவர்களே, 1978 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 25 ம் தேதியன்று இந்தக் குழு கூடியிருக்கிறது. இன்றைக்கு 1979 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 25 ம் நாள், ஒரு வருஷம், எட்டு மாதங்கள் அல்ல, ஆகவே இதில் 12 விஷயங்களைப் பற்றி விவாதிப்பதற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. முதலில் ஊதிய வரம்பை 400லிருந்து உயர்த்தப்படுவது என்பது. அதை எந்த அளவுக்கு உயர்த்தியுள்ளது? இறுதியில் சி.ஐ.டி.,யூ.வுடன் கலந்து பேசி ஒரு ரிப்போர்ட்டை அனுப்பும் என்று சொல்லி ஸ்பெஷல் டிபுடி கமிஷனருக்கு உத்தரவு இடப்பட்டுள்ளது......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் கேட்கும் கேள்விகளை வைத்துக் கொண்டு 4 துணைக் கேள்விகள் கேட்கலாம், இப்படி நீளமாக கேட்டுக் கொண்டே போனால் எப்படி. அமைச்சர் பதில் சொல்லமுடியும்?......

திரு. வி. கே. கோதண்டராமன் : கேட்க நினைத்ததை கேட்டு முடிப்பதற்குத் தலைவர் அவர்கள் அனுமதிக்க வேண்டும்.. ......

1979 ஏப்ரல் 25]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் ஒவ்வொரு தடவையும் 4 துணைக் கேள்விகள் கேட்கும் அளவிற்கு கேட்டுக் கொண்டே போகிறீர்கள். இவ்வளவு நேரம் அனுமதிக்க முடியாது.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக எல்லாப் பிரச்சினைகள் பற்றியும் ஆழமாகப் பரிசீலனை செய்து வருகிறோம்.

வீட்டுவசதி வாரியத்தால் ஒதுக்கப்படும் மனைகள்.

*வினா எண் 816—திரு. வ. மு. சுப்பிரமணியன் : மாண்புமிகு தொழிலாளர்நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தினால் முதலில் ஒதுக்கப்படும் வீட்டுமனைக்குப் பதிலாக வேறு வீட்டுமனை ஒதுக்கும்பொழுது அதிகக் கட்டணம் வசூலிப்பதாக முறையீடுகள் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதிகக் கட்டணம் வசூலிப்பதை நிறுத்தி வைக்கும் உத்தேசம் அரசுக்கு உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஒரு சில ஒதுக்கீடுதாரர்கள், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் தங்களுக்கு முதலில் ஒதுக்கிய மனைகளுக்குப் பதிலாக வேறு மனைகள் ஒதுக்கும் போது அதிகக் கட்டணம் வசூலிப்பதாக முறையீடு செய்துள்ளனர். இவற்றை அரசு ஆராய்ந்து அவை ஒவ்வொன்றின் நியாய அடிப்படையில் ஆணை பிறப்பித்துள்ளது.

(ஆ) அதிகக் கட்டணம் வசூலிப்பதை நிறுத்தி வைக்கப் பொதுவான ஆணை பிறப்பிக்க உத்தேசம் அரசுக்கு இல்லை.

திரு. வ. மு. சுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, வீட்டு மனைகளை ஒதுக்கும்போது அதற்கான தொகையை தவணை முறையில் செலுத்த வேண்டும் என்றிருக்கிறது. அது விதி முறை. ஆனால் அப்படி ஒதுக்கும்போது மொத்த தொகைக்கும், அந்த மனைக்கான மொத்த தொகைக்கும் வட்டியை செலுத்த வேண்டும் என்று சொல்கிறார்களே இது நியாயம்தானா, அதைக் குறைப்பதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு மனை கொடுக்கப்பட்டு, அவர்கள் அதை வேண்டாம் என்று வேறு மனையைக் கேட்பார்களேயானால். அப்படி புதிதாகக் கொடுக்கப்படுகிற மனையின் அன்றைய